தமிழ்நாடு பதிவுத்துறைத்தலைவர் (முழுக்கூடுதல் பொறுப்பு)அவர்களின் நடவடிக்கைகள் சென்னை-28.

முன்னிலை: திரு.ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப.,

எண்.4364/கே1/2016 நாள் 21.6.2017

பொருள்: பணி நியமனம் - பதிவுத்துறை - தொகுதி IV தேர்வு 2013-14 மற்றும் 2014-2015 தட்டச்சர் பதவி -தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் - பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் துவக்குதல்- ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

பார்வை : 1.தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண்.870/PSD-F/2016 நாள் 3.3.2017

2.பதிவுத்துறைத்தலைவர் ஆணை எண்.4364/கே1/2016 நாள் 4.4.2017

3.அரசாணை (பல்வகை)எண்.130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(எஸ்)துறை, நாள்.22.07.2008(பதிவுத்துறைத்தலைவர் மே.எ.எண்.42414/கே1/2008 நாள் 24.10.2008.

4.அரசாணை G.O.Ms.No.16, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(B)துறை, நாள் 21.02.2002.

5.துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள் மாவட்டப்பதிவாளர்களிடமிருந்து பெறப்பட்ட பணிசேர் அறிக்கைகள்

*******

**ஆணை:**

பார்வை 1-ல் காணும் தேர்வாணையக் கடிதத்தின்படி பதிவுத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2-ல் காணும் ஆணையின்படி பணி நியமனம் செய்யப்பட்ட இணைப்பில் கண்ட தட்டச்சர்களின் பணி அவர்கள் பணியில் சேர்ந்த நாளான கலம் 5-ல் கண்ட நாள் முதல் தட்டச்சர் பதவியில் வரன்முறை செய்தும் தமிழ்நாடு அமைச்சுப் பணி விதி 32(a)(i)-ன்படி இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவம் துவக்கியும் ஆணையிடப்படுகிறது.

2. பார்வை 3-ல் காணும் அரசாணைப்படி இணைப்பில் கண்ட தட்டச்சர்கள் தகுதிகாண்பருவ காலத்திற்குள் தொழில் நுட்பக் கல்வித் துறையால் நடத்தப்படும் "Certificate Course in Computer on Office Automation" தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனப் பயனுரை வழங்கப்படுகிறது.

3. பார்வை 4-ல் கண்ட அரசாணைப்படி, தட்டச்சர்களாக பணிபுரிபவர்கள் உதவியாளராக பதவி உயர்வு பெற வேண்டுமெனில், அவர்கள் தமது தட்டச்சு பணிக்கு இடையூறின்றி, ஓராண்டு இளநிலை உதவியாளர் பயிற்சி மேற்கொள்ளுதல் வேண்டும். மேற்கண்டவாறு தட்டச்சர்களுக்கு இளநிலை உதவியாளர் பயிற்சி அளிக்கவும் பயிற்சி

அளிக்கப்பட்டது தொடர்பாக உரிய குறிப்புகளை பணிப்பதிவேட்டில் சேர்க்கவும் சம்மந்தப்பட்ட மாவட்டப்பதிவாளர்கள்/துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4. பணிவரன்முறை செய்யப்பட்டது தொடர்பாக பணிப்பதிவேட்டில் உரிய குறிப்புகள் சேர்க்குமாறும், இவ்வாணை நகலை சம்பந்தப்பட்ட தட்டச்சர்களுக்கு சார்பு செய்து ஒப்புதலை பெற்று கோப்பில் வைக்கவும் சம்பந்தப்பட்ட துணைப்பதிவுத்துறைத் தலைவர்கள்/ மாவட்டப் பதிவாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஒம்/21.6.2017
பதிவுத்துறைத்தலைவர்

/ஆணைப்படி/

மாவட்டப் பதிவாளர்(வழிகாட்டி)(கூ.பொ.)
K 23/6/17
23.6.17

பெறுநர்:
சம்பந்தப்பட்ட தட்டச்சர்கள்
(மாவட்டப்பதிவாளர்கள்/துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள் மூலம்)

நகல் :
1.சம்மந்தப்பட்ட துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்/மாவட்டப் பதிவாளர்கள்
2.அ4 இருக்கையாளர், பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்
3.முக்கிய ஆணை கோப்பு/தனிநகல்-1

<u>இணைப்பு</u>

| வ.எண். | பெயர் திரு / திருமதி/செல்வி | பணிபுரியும் பதிவு மாவட்டம்/ அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை நாள்/தகுதிகாண் பருவம் துவங்கும் நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | சி.தில்லை | மாவட்டப் பதிவாளர் அலுவலகம், தருமபுரி(தணிக்கை) | 17.04.2017 மு.ப. | 17.04.2017 மு.ப. |
| 2. | க.மோகன் | மாவட்டப் பதிவாளர் அலுவலகம், தஞ்சாவூர்(நிர்வாகம்) | 12.04.2017 மு.ப. | 12.04.2017 மு.ப. |
| 3. | சி.தீபா | மாவட்டப் பதிவாளர் அலுவலகம், கரூர்(தணிக்கை) | 12.04.2017 மு.ப. | 12.04.2017 மு.ப. |
| 4. | S.மேகநாதன் | மாவட்டப் பதிவாளர் அலுவலகம், புதுக்கோட்டை(தணிக்கை) | 12.04.2017 மு.ப. | 12.04.2017 மு.ப. |
| 5. | R.நிர்மல் குமார் | பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம், சென்னை-28 | 11.04.2017 பி.ப. | 11.04.2017 பி.ப. |
| 6. | P.தாயம்மாள் | மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பாளையங்கோட்டை(நிர்வாகம்) | 12.04.2017 மு.ப. | 12.04.2017 மு.ப. |

ஒம்/21.6.2017
பதிவுத்துறைத்தலைவர்

/ஆணைப்படி/

மாவட்டப் பதிவாளர்(வழிகாட்டி)(கூ.பொ.)
23/6/17